www.tamilarangam.net

# சிந்தனை



## 1/88

நமது
ஒரு தேசத்தின்
அரசியல் தற்கொலை
இதுவென அறியார்
கரங்களில் உயரும்
கருவிகளைப் பறிக்கும்
ஒரு மக்கள் குரல்
அராஜகத்தின் வேருக்கு
ஒரு கன்னி வெடி.

— சேரன்.

**SINTHANAI**

பங்குனி March 1988

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்தனை

தமிழ் மக்களின் இருள் சூழ்ந்த, நிச்சயமற்ற நிகழ் காலத்தில் தெளிவான சிந்தனை ஊடாக முறையான அரசியல் கோட்பாடுகளை ஆராய்ந்து ஸ்திரமான பாதையில் செல்வதே நமது குறிக்கோளாகும். மேலும் உங்கள் கருத்துக்களையும், கட்டுரைகளையும் சிந்தனை வரவேற்கின்றது.

சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலமே சிந்தனை உருவாகின்றது.

கடிதங்கள், கட்டுரைகள் மற்றும் சகல விடயங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி.

| | |
|---|---|
| ஆசிரியர் குழு, | Editors, |
| சிந்தனை | SINTHANAI |
| ஒல்கா ஸ்ராஸா, 49 | Olga str 49, |
| 7 ஸ்ருட்காட் 1, | 7-Stuttgart 1. |
| மேற்கு ஜேர்மனி. | West Germany. |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தோழர் விஜயானந்தனுக்கு அஞ்சலி

தமிழ்த் தொழிலாளர்களின் அன்றாட
போராட்டங்களில் பங்குகொண்டு
தன் வாழ்க்கையை முற்போக்கு
அரசியலுக்கு அர்ப்பணித்த தோழர்
விஜயானந்தன் அராஜகவாதிகளின்
குண்டுகளுக்குப் பலியாகிவிட்டார்.
தமிழ்மண்ணில் வேரூன்றிய ஒரு
சிகப்பு விதை பலாத்காரமாக
அகற்றப்பட்டுவிட்டது.
ஆளும் வர்க்கங்களின் அதிகாரங்களை
நிலைநிறுத்த இன்று அராஜகம் துணை
போகின்றது. அணிதிரளும் மக்களின்
சக்தியினாலேயே இதைத் தடுத்து
நிறுத்தத முடியும் என்பது எமது
நம்பிக்கை.

மறைந்த தோழருக்கு
எமது அஞ்சலிகள்.

— சிந்தனை

www.tamilarangam.net

## யமன்

காற்று வீசவும்
அஞ்சும் ஓர் இரவில்
நட்சத்திரங்களுக்கிடையே இருக்கிற
அமைதியின் அர்த்தம் என்ன
என்று
நான் திகைத்த ஓர் கணம்,

கதவருகே யாருடைய நிழல் அது?

நான் அறியேன்;
அவர்களும் அறியார்.
உணர்வதன் முன்பு
அதுவும் நிகழ்ந்தது......

மரணம்.

காரணம் அற்றது,
நியாயம் அற்றது,
கோட்பாடுகளும் விழுமியங்களும்
அவ்வவ்விடத்தே உறைந்து போக
முடிவிலா அமைதி.

மூடப்பட்ட கதவு முகப்பில்,
இருளில்,
திசை தெரியாது
மோதி மோதிச் செட்டையடிக்கிற
புறுக்களே,

தாங்கும் வலுவை என்
இதயம் இழந்தது.

இளைய வயதில்
உலகை வெறுத்தா
நிறங்களை உதிர்த்தன,
வண்ணத்துப் பூச்சிகள்?

புழுதி படாது
பொன் இதழ் விரிந்த
சூரிய காந்தியாய்,
நீர் தொடச்
சூரிய இதழ்கள் விரியும்
தாமரைக் கதிராய்,
நட்சத்திரங்களாய்
மறுபடி அவைகள் பிறக்கும்.

அதுவரை,
பொய்கைக் கரையில்
அல்லகளைப் பார்த்திரு!

சேரன்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு முற்போக்குவாதியின் கொலை

**விஜயகுமாரணதுங்கா**

திரு. விஜயகுமாரணதுங்கா பிற்போக்குவாதிகளின் குண்டுகளுக்குப் பலியாகிவிட்டார். நிதானமாகச் சிந்தித்துச் செயலாற்றிய ஒரு நல்ல அரசியல்வாதியை அராஜகம் அரசியல் அரங்கிலிருந்து அப்புறப்படுத்தி விட்டது. அரசியலற்ற அராஜகவாதிகள் எவ்வாறு ஏகாதிபத்தியத்திற்கும் அதன் ஏவலாளர்களுக்கும் துணை போகின்றார்கள் என்பதை இந்தக் கொலை நிரூபித்துக் காட்டுகிறது. மக்கள் உரிமைகளில் நம்பிக்கை கொண்டவர்களும் மனிதாபிமானமுள்ளவர்களும் இந்தக் கொலைகளைக் கண்டித்தேயாக வேண்டும். அரசியல் கொலைகள் எமது நாட்டிற்குப் புதியவையல்ல. கொலைகள், சகோதரப்படுகொலைகள், உட்கொலைகள், மரணதண்டனைகள் இவற்றையெல்லாம் நாம்தான் செய்தோம் என்று பெருமைப்பட்டுக்கொள்ளும் "அரசியல்" தலைவர்களைப் பெற்றிருக்கும் துர்பாக்கியநாடுதான் எமது தேசம். அவை இலட்சக்கணக்கான மக்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு புதிய பாதையில் திருப்புவதற்கு துணைநிற்கக்கூடிய ஒரு முற்போக்காளனை, அந்தக் கடமையில் முன்னேறுமுன் தடுக்கு முகமாக ஒரு கொலை செய்யப்படும் பொழுது அதைச்செய்தவர்கள் மக்கள் துரோகிகள் என்பது நிரூபணமாகிவிடுகின்றது.

காலாகாலமாக இலங்கைமக்களின் அரசியல் தலைமைகள் முதலாளி த்துவ அரசியல் கட்சிகளுக்கிடையில் கைமாறிக்கொண்டு வருவதுதா -ன் சரித்திரம். இனமத வெறியையும் போலித் தேசிய மாயையும் மக்களுக்கு ஊட்டி நலன்களைப் பாதுகாத்துவந்த இந்தத் தலைமை கள் மக்களுக்கு எந்தவித விமோசனத்தையும் அளிக்கவில்லை.

மக்களை இந்த நிலமைகளிலிருந்து விடுவித்து முற்போக்கான பாதையில் இட்டுச்செல்வதற்கு எடுத்த முயற்சிகள் எல்லாம் சதி திட்டங்களினாலும் பலாத்காரத்தினாலும் திசைதிருப்பப்பட்டுள்ளன. இதன் பலன் மக்கள் குழப்பமடைந்து ஆளும்வர்க்கங்களின் பின் மீண்டும் தள்ளப்பட்டதேயாகும். இன்றைய அரசியல் நிலமைகளில் அவ்வாறான ஒரு குழப்பநிலமையை ஏற்படுத்துவதற்காகவே திரு. விஜயகுமாரணதுங்கா கொலை செய்யப்பட்டுள்ளார் என்பது தெளிவாகின்றது.

இலங்கையை ஒரு தளமாகவும் கேளிக்கைப்பூமியாகவும் வைத் திருக்க விரும்பும் ஏகாதிபத்தியவாதிகள் அது இன்னுமொரு "லெபனனாக" வந்தாலும் தமது கைகளைவிட்டுப் போகக் கூடா -து என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். இந்த நிலமை களிலேயே, இலங்கையில் ஆளும்வர்க்கங்களுக்கெதிராக சாதாரண உழைக்கும் மக்களை ஐக்கியப்படுத்தி ஒரு அணியில் திரட்டுவதற்கு இடையூறாக இருந்து வந்த தேசிய இனப்பிரச்சனைக்கு ஒரு சமூக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மான தீர்வு காணக்கூடிய அரசியலை முன்னெடுத்து சிங்கள—தமிழ் முற்போக்குச்சக்திகளை ஒருங்கிணைப்பதில் திரு. விஜயகுமாரணதுங்கா ஓரளவு வெற்றியும் கண்டிருந்தோர். இடதுசாரி ஐக்கிய முன்னணியின் தோற்றமும் அதனுடன் தமிழ் இடதுசாரி இயக்கங்களுக்கு ஏற்பட்டிருக்கும் தொடர்புகளும் இதற்குச் சான்று பகருகின்றன.

இடதுசாரி ஐக்கி முன்னணி ஒரு அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது மட்டுமல்லாமல், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் ஒரு அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதை இந்த இயக்கங்கள் வெறும் பாராளுமன்றப்பாதைக்குப் போய்விட்டன என அதிதீவிர இடதுசாரித்தனமாக விமர்சிப்பது மடமையாகும். இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் இதுவரைகாலமும் உருவாகி அங்கிகாரம் பெற்றகட்சிகள் (தமிழ் காங்கிரஸ, தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி) முதலாளித்துவக் கட்சிகளாகவே இருந்தன.


முற்போக்கு அரசியல் வேலைத்திட்டமொன்றை முன்வைத்த தமிழ் இயக்கமொன்று அரசியல் அங்கிகாரம் பெற்றுள்ளது இலங்கைத் தமிழ்மக்கள் வரலாற்றில் ஒரு மைல்கல் என்றே சொல்லவேண்டும். இவ்வகையான பின்தள்ள முடியாத வரலாற்று மாற்றங்கள் ஏகாதிபத்தியவாதிகளையும் பிற்போக்கு வாதிகளையும் நிலைகுலையச் செய்துள்ளன. இந்த மாற்றங்களை சதித்திட்டங்களிலும், பொய்ப்பிரசாரங்களிலும் அரசியற் கொலைகளிலும் பின் தள்ளி விடலாம் என பிற்போக்கு சக்திகள் மனப்பால் குடிக்கின்றன.

திரு. விஜயகுமாரணதுங்காவின் மரணம் ஐக்கியப்பட்ட மக்கள் சக்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யை புதிய உணர்வுடன் முன்னேறுவதற்கு சங்கற்பம் செய்யத் தூண்டியுள்ளது.

நதிகள் பின் நோக்கிப் பாய்வதில்லை. அராஜகவாதிகளின் குண்டுகள் வரலாற்று நதியைப் பின்தள்ளிவிட முடியாது.

கே. பி. ராஜ.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எழுதப்படாமலேயே போயிருக்க வேண்டிய ஒரு கவிதை.

சவப்பெட்டிகளைத் திறந்து வையுங்கள்
நெடுமரப் பெருநிழல்கள்
ஒடுங்கி,
சோகமாகப்
புற்களின் மேல் விழுந்திருக்கிற
இந்த நிலத்தில்
காற்று எப்போதும் போல
விட்டு விட்டு வீசிக்கொண்டிருக்கிற
நேரத்தில்
இன்னும் நிறைவேறாத ஆசைகளும்
இலட்சியங்களும்
அறுந்து
துயர இழைகளில் ஆடிக்கொண்டிருக்கும்
ஆறடி நீளம் இரண்டடி அகலம்
என ஒரு வெளியில்

அந்த இரு
சவப்பெட்டிகளைத் திறந்து வையுங்கள்
கொஞ்ச நேரமாவது
புதிய ஆடைகள் வேண்டாம்

www.tamilarangam.net

அகதி முகாம்களில்
மாற்றுடையின்றிக்
தோய்த்த ஆடை
உலரும் வரைக்கும்
மறைப்பினுள் நிற்கும்
நம் பெண்களை நினைப்போம்
குருதி படிந்த அங்கிகளைச்
சற்றே தளர்த்தி
ரணங்களைத் தெரிய விடுவோம்
மெல்லிய வெய்யில்
இலைகளுக்கூடாகப் பூக்களாய்
அவற்றின் மேல் உதிரட்டும்
காற்று வந்து
தடவிச் செல்லட்டும்
தலை சிதறிக்
குருதிநிலம் தெறிக்கக்
கொலை நடந்த இடத்தில்
குருதியில் ஊறிய
சுலோக அட்டை கிடந்ததை
மறுபடியும் அனைவரும் நினைப்போம்
ஒரு வகையில்,
இந்த உடல்கள் அதிரஸ்டம் உள்ளவை

www.tamilarangam.net

சவப்பெட்டி
ரப்பர் வாசனையின்றி எரிய
விறகுகள்
சுற்றி அழச் சுற்றம்
கண்ணீர் அஞ்சலி
கவிதை வரியில் துண்டுப்
பிரசுரம்

பெட்டியில் அடங்கும்
வாய்ப்பே அற்று
மயான மூலையில்
முகமறியா இருளில்
முகமிழந்து புதைந்து உடல்களை
பாதி எரிந்து
மீதி அழிந்து
சிதைந்த உடல்களைச்
சுதந்திரத்திற்காய்க்
களத்திலிறங்கிச்
சுதந்திரம் இழந்தவர்களை
நாம் நினையாதிருந்தால்
மிகவும் கொடிது

www.tamilarangam.net

இது எதிரியின் வேலையல்ல
எம்மவர் கொலைக்கரம்
பதித்த சுவடுகள்

கறைபடியாக் கரங்களெனத்
திக்கெட்டும் பறையறைந்து
கவி சொன்ன
என்வாய்க்குச்
செருப்படி
நியாயப் படுத்தத் துண்டுப் பிரசுரம்
போலித் தராசு,
நீலிக் கண்ணீர்
உதவாது தோழரே
நமது
ஒரு தேசத்தின்
அரசியல் தற்கொலை இதுவென அறியார்
கரங்களில் உயரும்
கருவிகளைப் பறிக்கும்
ஒரு மக்கள் குரல்
அராஜகத்தின் வேருக்கு
ஒரு கண்ணி வெடி.

— சேரன்.

( நன்றி - தமிழ் முரசு )

www.tamilarangam.net

# சிந்தனை



## ஆசிரியர் கருத்து

முதலாளித்துவ அரசாங்கங்களே மாறி மாறி பதவிக்கு வந்து கொண்டிருக்கின்ற எமது நாட்டில் இந்த இரு அணிகளுக்குமெதிராக மூன்றாவது இடதுசாரி அணி ஒன்று உருவாக்கப்பட வேண்டிய அவசியத்தை பலரும் உணர்ந்திருந்தனர். அவ்வாறான ஒரு ஐக்கிய முன்னணி உருவாக்கிக் கொண்டு வரும் இந்த வேளையில் அதன் நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்பதை சமீப கால நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டியுள்ளன. முதலாளித்துவ அரசியல் கட்சிகளுக்குப்பின்னும் அராஜக இயக்கங்களுக்குப்பின்னும் சென்று கொண்டிருக்கும் மக்களை இவற்றிற்கு விரோதமான இடதுசாரி முன்னணி ஒன்றின் கீழ் அணிதிரட்டுவது இன்று அவசியமான இடைக்கால வேலைத்திட்டமாகவே கருதப்படவேண்டும்.

இப்படியான ஒரு ஐக்கிய முன்னணியின் வரலாற்றுத் தேவையையும் அது சம்பந்தமாக தொழிலாள வர்க்க சக்திகள் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளையும் ஆராய்வதே எமது நோக்கமாகும்.

*   *   *   *

இலங்கை போன்ற அபிவிருத்தியடையாத நாடுகளில் ஆட்சிசெய்யும் ஆளும் வர்க்கங்கள், அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஆட்சிசெய்யும் முதலாளித்துவ வர்க்கங்கள் வரலாற்றில் செய்து முடித்த தேசிய

www.tamilarangam.net

ஜனநாயகக் கடமைகளை; தமது சொந்த நாடுகளில் செய்து முடிக்க இயலாதவைவாகவே இருக்கின்றன.

அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்த நிலப்பிரபுத்துவ அரசுகள் முதலாளித்துவ வர்க்கங்களினால் தூக்கி எறியப்பட்டு முதலாளித்துவ அரசுகள் அமைக்கப்பட்டன. நிலப்பிரபுத்துவ அடிப்படையில் அமைந்த பொருளாதாரம், உற்பத்தியை அதிகரிக்கக் கூடிய முதலாளித்துவ அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டது. சந்தைகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக தேசங்கள் உருவாக்கப்பட்டன. உருவாகிய தேசங்கள் தம்மை ஆட்சி செய்த அரசுகளுக்கெதிராக விடுதலைப் போராட்டங்களை முன்னெடுத்து வெற்றியும் கண்டன. பிரெஞ்சுப் புரட்சி, அமெரிக்க விடுதலைப் போராட்டம், நாடுகளின் ஐக்கியத்தினால் உருவாகிய ஜேர்மனிய அரசு, இவையெல்லாம் இந்த மாற்றங்களினால் ஏற்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகள். இவ்வாறான மாற்றங்களை அபிவிருத்தியடையாத நாடுகளில் உள்ள ஆளும் வர்க்கங்கள் செய்து முடிக்க இயலாது இருக்கின்றன.

கைப்பொம்மை ஆளும் வர்க்கங்கள்.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளின் ஆளுமைக்குக் கீழ் கொண்டுவரப்பட்டு சுரண்டப்பட்டன. இந்த சுரண்டலுக்கு உதவக்கூடிய ஆளும் வர்க்கங்களை அந்த நாடுகளிலிருந்த நிலப்பிரபுத்துவ வர்க்கங்களிலிருந்து ஏகாதிபத்திய அரசுகள் உருவாக்கின. இந்த ஆளும் வர்க்கங்கள் நிலப்பிரபுத்துவ பொருளாதார

www.tamilarangam.net

முறையை முற்றாக முதலாளித்துவ முறைக்கு மாற்றியமைப்பதற்கோ அல்லது ஏகாதிபத்தியத்திற்கு எதிரான விடுதலைப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கோ இயலாத ஏகாதிபத்தியக்கைப்பொம்மை ஆளும் வர்க்கங்களாகவே இருந்தன.

தேசிய ஜனநாயகக் கடமைகள்.

இன்று அபிவிருத்தியடையாத நாடுகளில் நிறைவேற்றப்படாமல் இருக்கும் தேசிய ஜனநாயகக் கடமைகள் அரசியல் தன்மையான-வை மட்டுமல்லாமல் சமூக பொருளாதார அடிப்படையிலும் அமைந்திருக்கின்றன. நிலப்பிரபுத்துவ, அரைநிலப்பிரபுத்துவ சர்வதிகார ஆட்சியாளர்களை அகற்றுதல், ஏகாதிபத்தியத்திடமிருந்தும், தேசிய ஒடுக்கு முறையாளர்களிடமிருந்தும் தேசிய இனங்களை விடுதலை பெறச்செய்தல். தேசங்களை ஐக்கியப் படுத்தல். தேசிய மூலவளங்களை அந்நிய ஆதிக்கத்திலிருந்து மீட்டெடுத்தல் ஆகியவை அரசியல் கடமைகளாகும்.

நிலஉடமையில் சீர்திருத்தங்களை ஏற்படுத்துதல், உற்பத்தியை தொழில் மயப்படுத்துதல். ஐக்கியப்பட்ட சந்தையை உருவாக்குதல் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் சமூக நலசேவைகளையும் அபிவிருத்தி செய்தல் ஆகியவை சமூக பொருளாதார தன்மையுள்-ள தேசிய ஜனநாயகக் கடமைகளாகும்.

சதாரணமான முதலாளித்துவ கடமைகளை நடைமுறைப்படுத்த இந்த ஆளும் வர்க்கங்கள் தயங்குவதற்குக் காரணம் இவற்றுள் காணப்படும் உள்முரண்பாடும், சாதாரண மக்களின் தேவைகளுக்கும் ஆளும்வர்க்கங்களின் நலன்களுக்குமிடையிலுள்ள வெளிமுரண்பாடுமேயா-கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அபிவிருத்தியடையாத நாடுகளிலுள்ள ஆளும்வர்க்கங்கள், பல சமனற்றமுறையில் வளர்ச்சி பெற்ற வர்க்கங்களை உள்ளடக்கியவையாக இருக்கின்றன. நிலப்பிரபுக்கள், ஏகாதிபத்தியத்தின் ஏஜன்டுகளான தரகுமுதலாளிகள், தொழிலதிபர்களாக இருக்கும் தேசியமுதலாளிகள், பெரும் வர்த்தகர்கள், வட்டிக்கடைக்காரர்கள் — இவர்களின் கூட்டே இந்த ஆளும் வர்க்கமாகும். "சாதாரண தொழிலாள, விவசாய மக்களை சுரண்டுவதற்காக ஒன்றுபடும் இந்த வர்க்கங்கள், தமது நலன்களை பாதுகாப்பதற்காக முரண்படுகின்றன. நிலப்பிரபுத்துவப் பொருளாதாரத்தை மாற்றி அமைப்பதற்கோ அல்லது ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுபடுவதற்கோ சாதாரணமக்களை அணிதிரட்டி போராட்டங்களை முன்னெடுப்பதற்கு தேசிய முதலாளித்துவ சக்திகள் அஞ்சுகின்றன. இதற்குக் காரணம் நிலப்பிரபுத்துவத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக அணிதிரளும் தொழிலாள விவசாய மக்கள் தேசிய முதலாளித்துவ நலன்களுக்கு மட்டும் போராடாமல், தமது வர்க்க நலன்களுக்காக புரட்சியை தொடர்ச்சியாக முன்னெடுப்பார்கள் என்பதே காரணமாகும்."

ருசியாவில் முடியாட்சிக்கு எதிராக ஏற்பட்ட புரட்சி, சீனவிலும் வியட்நாமிலும் அன்னிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஏற்பட்ட போராட்டம், கியூபாவிலும் நிக்கரகுவாவிலும் சர்வதிகாரிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட் போராட்டங்கள் இறுதியில் தொழிலாள வர்க்கம் தனது அரசைஅமைப்பதற்கான புரட்சிக்கு தொடர்ச்சியாக இட்டுச் சென்றுள்ளது. இந்த வரலாற்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மைகளை உணர்ந்திருக்கும் ஆளும் வர்க்கங்கள் தொழிலாள விவசாய மக்கள் சுதந்திரமாக அமைப்பாவதையும் அணிதிரள்வதை-யும் வெறுக்கிறார்கள். இந்த நிலைமைகளில் சாதாரண முதலாளித்-துவ அமைப்பில் இருக்கக்கூடிய உற்பத்திப் பெருக்கத்தையும் வாழ்க்கைத்தரத்தையும், குறைந்த பட்ச ஜனநாயகத்தையும் கூட அபிவிருத்தியடையாத நாடுகளிலுள்ள மக்கள் அனுபவிக்கமுடிவதில்லை. இதற்குப் பதிலாக ஆளும்வர்க்கங்களின் சர்வதிகாரமும் வறுமையு-ம் தான் நிலவுகின்றது. தேசிய இனங்களின் ஒடுக்கு முறைகளும் ஏகாதிபத்திய சுரண்டல்களும் தொடருகின்றன.

## வரலாறு படைக்கக்கூடிய வர்க்கம்.

அபிவிருத்தியடையாத நாடுகளில் ஏகாதிபத்திய சுரண்டல்களுக்கும், தேசிய இனங்களின் ஒடுக்கு முறைகளுக்கும், அரைநிலப்பிரபுத்துவ சர்வதிகாரிகளுக்கும் எதிராக வெகுஜனங்களின் ஆதரவுடன் ஏழை விவசாயிகளின் துணையுடன் போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய வர்க்கம் தொழிலாள வர்க்கமே என்பதை வரலாறு எமக்கு எடுத்துக்காட்டியுள்ளது. தேசிய ஜனநாயக கடமைகளை நிறை வேற்றுவது மட்டுமல்ல அதைத் தொடர்ந்து பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு இட்டுச் செல்வதும் இந்த வர்க்கத்தின் கடமையாகவே இருக்கின்றது.

தொழிலாள வர்க்கம் பூரணமாக வளர்ச்சி பெறாமலும் பலவீன-மாகவும் இருக்கின்ற நாடுகளில் இது எப்படிச் சாத்தியமாகும் எனக் கேள்விகள் எழுவது இயற்கை. இப்படியான நாடுகளில் இந்தப் போராட்டங்கள் கடினமாக இருக்கும் என்பது உண்மையெனினும் சாத்தியமற்றது என்று அர்த்தமாகாது. நிறைவேற்றப்படாமல் இருக்

www.tamilarangam.net

கும் தேசிய ஜனநாயகக் கடமைகளுக்கான போராட்டங்கள் சமுதாயப்புரட்சியின் முதற்படிகளாகவே அமைகின்றன. இப்போராட்டங்களில் சகல சுரண்டப்படும் வர்க்கங்களும் பங்குகொள்ள முன் வருகின்றன. ஏழை விவசாயிகள், நகரப்பகுதி பாட்டாளிகள், அடிமட்டத்தில் வாழும் குட்டிமுதலாளித்துவ சக்திகள் எல்லாம் தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியமுன்னணி அமைத்துப் போராட முன்வருகின்றன. இந்த ஐக்கிய முன்னணிகள் எவ்வாறு உருவாகலாம் என்பதை ஒவ்வொரு நாட்டிலுமுள்ள யதார்த்த அரசியல் சூழ்நிலைமைகளே நிர் நிர்ணயிக்கின்றன.

இவ்வாறான ஒரு ஐக்கிய முன்னணி மூலமாகவே தேசிய முதலாளித்துவ -த்தின் பலவீனத்தை அம்பலப்படுத்தவும், ஏகாதிபத்தியத்தின் கைக் கூலிகளாக இயங்கும் தரகு முதலாளிகளின் துரோகங்களுக்கு எதிரா -க மக்களை அணிதிரட்டவும், சமூக பொருளாதார மற்றும் ஜனநாயக உரிமைகளுக்கான இடைக்காலக் கோரிக்கைகளின் அடிப்படையி -ல் போராட்டங்களை முன்னெடுக்கவும் முடியும்.

இவ்வாறு ஐக்கிய முன்னணியில் அணிதிரளும் மக்களை படிப்படியாக ஆளும்வர்க்கங்களுக்கெதிரான இறுதிப்போராட்டத்திற்கு இட்டுச் செல்லக்கூடிய இடைக்கால வேலைத்திட்டங்களுடன் செயற்படுவதே தொழிலாள வர்க்க சக்திகளின் கடமையாகும்.

எந்தவிதமான ஐக்கிய முன்னணிகள் ஏற்பட்டாலும் தொழிலாளவர்க்க சக்திகள் தமது வர்க்கரீதியான அரசியல் மற்றும் வெகுஜனஅமைப்புக் களின் சுதந்திரங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். உழைக்கும் மக்கள் அமைப்பாவதற்கும் போராட்டங்களை முன் னெடுப்பதற்கும் எந்தவித இடையூறுகளும் ஏற்படவிடக்கூடாது. சகல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முரண்பாடுகளும் உழைக்கும் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் விதத்திலேயே தீர்க்கப்படவேண்டும். எந்தவிதமான முதலாளித்துவ கூட்டு அரசாங்கத்திலும் பங்குகொள்ளக்கூடாது. இந்த விழிப்புணர்வுடனேயே தொழிலாளவர்க்கசக்திகள் இன்றைய ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு கொடுக்க வேண்டியது அவசியமாகும்.



# சிந்தனை

....போராட்டங்களினால் புடம் போடப்பட்ட சமதர்ம விதைகள் தமிழ் மக்கள் மத்தியில் இன்னும் இருக்கின்றன. ஆனால் ஒரு புரட்சிகர தலைமையில் தமிழ் மக்களுக்கு என ஒரு பாட்டாளிவர்க்கக் கட்சி தோன்றுவதற்கு எதிராக உள்ள காரணிகள் இன்னும் தமிழ் மக்கள் மத்தி-யிலிருந்து அகற்றப்படவில்லை.

சிந்தனை 2-85 (ஆவணி 1985) இல் வெளியான

கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




8th March, 1988.

The political events over here are drifting in a very dangerous direction. There are assasination squads sponsored both by the Government as well as by the Opposition. Murder is the order of the day. The State machinery itself is unpredictable, in that it is ridden with a loyalty crisis, resulting from the calculated moves of contending political figures within the Government itself (though not without links to the Opposition). I am the next target of the killer fascist gangs on this side after Vijaya Kumaratunga together with whom we sought to alter this situation by building up a mass movement of active agitation for democracy linking all communities in the Island. Ironically, it had to commence with the mass fineral of Vijaya Kumaratunga which brought a 500000 people on to the streets. ........

தென் இலங்கையிலுள்ள
இடதுசாரிக்கட்சித்
தலைவர் ஒருவரின்
கடிதத்தின் ஒரு பகுதி
இன்றைய பயங்கர நிலைமையை
எடுத்துக்காட்டுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# C.I.A. இன் சதித் திட்டங்கள் அம்பலமாகின்றன

குள்ளத்தனமானதும் நாசகாரமானதுமான வேலைகளை செய்வதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் சகபாடிகளும் என்றும் பின்நிற்பதில்லை. அமெரிக்காவின் நாசகார நடவடிக்கைகள் கொலைகாரக் கம்பனிகளான சி.ஐ.ஏ யினூடாக அமுல் நடத்தப் படுகின்றன.

இத்தாலியில் அல்டோமொராவின் கொலை தொடக்கம் சிலியில் அலன்டேயின் கொலையீறாக இவர்கள் செய்த கொலைகள் காணக் கிடக்கின்றன. தமது கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி செய்ய மறுத்த மூன்றாவது உலக நாடுகளின் அரசாங்கங்கள் இரவோடிரவாக மாற்றப் பட்டன. இந்தோனேசியாவில் ஒரு மில்லியன் கம்யூனிஸ்ட்டுக்கள் இரவோடிரவாக கொல்லப்பட்டு ஆட்சித்தலைவர் சுர்காணோ சிறையில் போடப்பட்டார்.

தனது நேரடியான அடாவடித்தனத்தின் மூலம் கோழிக்குஞ்சு நாடான கிறனடாவை அமெரிக்கஏகாதிபத்தியமானது அடித்துப்பிடித்து ஆக்கிரமித்துக் கொண்டது.

கியூபாவின் மக்கள் தலைவரான பிடல் காஸ்ட்ரோவை கொல்ல பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. உணவில் நஞ்சு கலக்கவும் சி.ஐ.ஏ தயங்கவில்லை.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட சட்ட பூர்வமான நிக்கரகுவாவின் புரட்சிகர அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக சி.ஐ.ஏ பகிரங்கமாக முயன்று வருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியாவில் மாநில ஆட்சித் தேர்தல்கள் தொடக்கம் ஜனாதிபதித் தேர்தல் ஈறாக டொலர்களை வாரியிறைத்து தமது நலன்களுக்கு ஆதரவாளர்களை ஆட்சிக்கு கொண்டுவர பெரும் முயற்சிகளை செய்கின்றது.

1962இல் தேர்தல்களில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு சிம்மசொப் சொப்பனமாக இருந்த வி.கே.மேனனை ஜனாதிபதி தேர்தல்களின் போது தோற்கடிக்க கடும் முயற்சிகளைச் செய்தது.

1967இல் பழைய காங்கிரஸ் அந்திம காலத்தை நெருங்கிய வேளையில் வலதுசாரி சக்திகளை ஒன்றிணைத்து தேர்தலைத் தொடர்ந்து ஒரு வலதுசாரி அரசாங்கத்தை அமைத்திட நேரடியாக முயன்றது. புதுடில்லியின் அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த கிரிம்ஸலி கம்பல் உட்பட பல சி.ஐ.ஏ யினர் இதில் பயன்படுத்தப்பட்டனர்.

1967 டிசம்பர் மாதம் 12இல் ராஜ்யசபையில் இதுபற்றிய கணக்குகள் அம்பலப்படுத்தப்பட்டன. சுதந்திரக்கட்சிக்கு 97.5 இலட்சம், ஜனசங்கட்சிக்கு 80 இலட்சம், சி.பி.குப்தாவிற்கு 15 இலட்சம் என்ற நீண்ட பட்டியல் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டது

1983 மே மாதத்தில் முன்னாள் பிரதமர் மொராஜி தேசாய் சி.ஐ.ஏ கைக்கூலி என்பது கேர்சு என்ற பத்திரிகையாளரால் அம்பலப்படுத்தப்பட்டது.

உலக நாடுகளின் விடயங்களில் அமெரிக்க ஏகாதிபத்தியம் இவ்வாறு அக்கறையோடு நடந்து கொள்வதற்கான காரணங்கள் தெரி

www.tamilarangam.net

யாதவையல்ல. மூன்றுவது உலக நாடுகளின் கனிப் பொருட்கள், மூலவளங்களைச் சுரண்டுவது, தமக்குத் தேவையான மனிதஉழைப்பை-பை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்வது, தமது நாட்டில் விற்கமுடியாமல் போகும் பொருட்களை சந்தைப்படுத்தும் இடங்களான மூன்றுவது உலக நாடுகளை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவது, இவையே நோக்கமாகும்.

இந்திய உபகண்டத்தைப் பொறுத்தவரை சி.ஐ.ஏ மேற்கொண்டுள்ள சதிநடவடிக்கைகள் கொஞ்சம் வித்தியாசமானதுதான். உலகின் 10வது தொழில் வளர்ச்சி பெற்ற நாடாகவும் வளர்ச்சியடைந்து வரும் முதலாளித்துவமாகவும் கருதப்படும் இந்தியாவானது இராணுவ ரீதியாக சோவியத் யூனியனுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தமும் அரசியல் ரீதியாக வலிமைபெற்று கூட்டுச் சேராக் கொள்கைகளை வலியுறுத்துவதும் அமெரிக்காவிற்கு கவலை தரும் விடயங்களேயாகும்.

இந்து மாசமுத்திரத்தில் அமெரிக்க கடற்படைகளின் நடமாட்டத்தை இந்தியா கட்டுப்படுத்துவது அமெரிக்க-இந்திய உறவுகளில் விரிசலை ஏற்படுத்தியுள்ள மற்றுமொரு காரணியாகும்.

இந்துமாசமுத்திரம் அமைதிப் பிராந்தியமாகப் பேணப்பட வேண்டும் என்ற கொள்கை கூட்டுச்சேரா இயக்கத்தினால் மீளவும் மீளவும் வலியுறுத்தப்பட்டே வருகின்றது. இதன் காரணமாக இந்தியா என்ற ஒரு நாட்டையே உலக வரைபடத்திலிருந்து அகற்றிவிட சி.ஐ.ஏ முனைந்து வருகின்றது. பல மாநிலங்களைக் கொண்ட இந்த இந்தியா என்ற பெரிய நாட்டைப் பிளவு படுத்தி அழிப்பதே அமெரிக்காவின் நோக்கமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சீக்கிய மற்றும் நாகாலந்து குழப்பவாதிகளின் நடவடிக்கைகளுக்கு அமெரிக்க டலர்கள் வாரியிறைக்கப்பட்டன. மதவாத சக்திகளையு-ம் குழப்பக்காரர்களையும் வெளிநாட்டுச் சக்திகள் வளர்த்து வருகின்றன என்பது இந்தியப் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள-து. இந்த வெளிநாட்டுச்சக்திகள் வேறு யாருமல்ல; சி. ஐ. ஏ யும் அதன் சர்வ தேசக் கூட்டாளிகளும்தான்.

நிக்சன் ஆட்சிக்கு வந்தவுடனேயே சீனவுடன் உறவுகளை விருத்தி செய்துகொள்வது தென் ஆசியப் பிராந்தியத்தில் அமெரிக்க நலன்களுக்கு அத்தியாவசியமானது என்பதை தெளிவுபடுத்தினர். சீன-இந்திய எல்லைத் தகராறும் சீன-ரஸ்சிய உறவு விரிசலும் வலுத்த போது இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் முடிவெடுத்தது. பாக்கிஸ்தான் அதிபர் யாகாகானி-ன் உதவியுடன் நிக்சன் தமது சீன உறவுகளை விருத்தி செய்து கொண்டார். 1972 நிக்சனின் சீன விசயம் இதன் வெளிப்பாடாகு-ம். இதனைத் தொடர்ந்து தென் ஆசியப் பிராந்தியத்தின் அரசியல் பிரச்சனைகள் அமெரிக்கா- சீன - பாக்கிஸ்தான் உறவுகளின் அடிப்படையில் இயங்கத் தொடங்கியது.

இந்துமாசமுத்திரத்தின் மாறிக் கொண்டு வரும் அரசியல் நிலமைகளின் மத்தியில் தமது ஆதிக்கத்தை வலிமைப்படுத்துவதற்காக டியாகோ கிரஸ்சியா தீவினை இராணுவ தளமாக மாற்றிய அமெரிக்க-பிரித்தானியா கூட்டு முயற்சியானது இவர்கட்கு இந்து மாசமுத்திரத்தில் உள்ள அக்கறையை தெளிவாகக் காட் கின்றது. பூகோள ரீதியாக இந்து சமுத்திரத்தின் மத்தியில் இச்சிறிய தீவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றி அறிந்து கொள்வது எமது கணிப்பீடுகளை உண்மைப்படுத்துகி ன்றது.

மொரிசியஸ் நாட்டிற்குச் சொந்தமான இத்தீவை 3 மில்லியன் டாலர்களுக்கு ( உண்மையில் விற்றதும் வாங்கியதும் பிரித்தானிய -யா. ஆகையால் மொரிஸியஸ் நாட்டிற்கு எந்த ஒரு டாலரும் போய்ச் சேரவில்லை ).1965 இல் அங்குள்ள தெங்கு தொழி ற்சாலையை மூடியதன் மூலம் அங்கு வாழ்ந்து வந்த 1000 குடி மக்களையும் மொரிசியஸ் நாட்டிற்குத் துரத்திவிட்டது பிரித்தானிய -யா.1966 இல் பிரித்தானியாவும் அமெரிக்காவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் தமது பாதுகாப்பிற்குத் தேவையான கப்பற்தளம், விமானத்தளம், விண்வெளிக்கலன்களைக் கண்காணிக்கும் தளம் ஆகியவற்றை அமெரிக்காவின் செலவில் அமைத்துக்கொள்ள இரு நாடுகளும் இணங்கிக்கொண்டன.

டியாகோ கார்சியாவிலிருந்து புறப்படும் கப்பல்களுக்கு எண்ணை கொடுக்கவும் தரித்து நின்று செல்லவும், கடற்படை வீரர்களுக் -கு இளைப்பாறவும் கேளிக்கையளிக்கவும் திருகோணமலைத் துறை முகத்தையும் அதைச்சார்ந்த பகுதிகளையும் பாவிப்பதற்கும், இந்துச சமுத்திரப் பிராந்தியத்தில் நடைபெறும் ராணுவ ரீதியிலான இரக சிய வானொலித் தொடர்புகளை ஒற்றுக் கேட்கவும் அமெரிக்கா சார்பான செய்திகளை ஒலிபரப்பவும் "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" என்ற ஒலிபரப்பு ஸ்தாபனத்தை இலங்கையில் தொடர்ந்து இயக்க வும் அமெரிக்காவும் பிரித்தானியாவும் பெரிதும் விரும்புகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சி . ஐ . ஏ . ஒப்பந்தம்.

சி . ஐ . ஏ சார்பாக இயங்கும் கம்பனிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் 1986 இன் நடுப்பகுதியில் செய்யப்பட்ட ஒப்பந்தம் விடயங்களை மேலும் தெளிவாக்குகின்றது. இந்த ஒப்பந்தம், காலம் சென்ற வில்லியம் கேசியின் உந்துதலின் பேரில் செய்யப்பட்டதென்றும், ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள இரு கம்பனிகளில் ஒன்று சிங்கப்பூரில் ( சி. ஐ. ஏ. முகவராக ) இயங்குகிறது என்றும் லங்கா கார்டியன் (1. 2. 88) தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவையாவன, -

திருகோணமலைத்துறைமுகம், அதைச்சார்ந்துள்ள சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசம், துறைமுகத்தை அண்டியுள்ள தீவுகள், துறைமுகத்திலுள்ள எண்ணை களஞ்சியப்படுத்தும் நிலயங்கள் எல்லாம் அமெரிக்க கம்பனிகளின் ஏகபோக உரிமையாக இருக்க வேண்டும். இதற்கு ஈடாக அமெரிக்க டாலர்களில் கொடுப்பனவு செய்வதுடன் மற்றைய நிதி மற்றும் ராணுவ உதவிகளுக்கு வகை செய்தல். இனப்பிரச்சனைக்கு ராணுவ ரீதியான தீர்வு காண்பதற்கு சகல ஒத்தாசைகளையும வழங்குதல்.

இந்த ஒப்பந்தம பற்றிய விபரங்களை இந்திய அரசும் அறிந்திருந்தது. இந்திய அரசிற்கு விசாகபட்டினம், கொச்சின், பம்பாய் ஆகிய பெரிய துறைமுகங்கள் இருப்பதும் கார்வாரில் பெரும் கப்பற்தளம் ஒன்று உருவாக்கிக் கொண்டு வருவதாலும் திருகோணமலையில் அதிக அக்கறையில்லாவிட்டாலும் அது அமெரிக்க ஊளவாளிகளின் கைகளுக்கு மாறுவதை விரும்பவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வாறான சூழ்நிலைகளிலேயே இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவாகியது. இந்த ஒப்பந்தத்தில் இலங்கையின் துறைமுகங்களையும் மற்றைய தளங்களையும் வெளிநாட்டுச் சகத்திகள் பாவிப்பது முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது. இது சி. ஐ. ஏ மற்றும் அமெரிக்க நேச சக்திகளுக்கு பெரும் ஏமாற்றத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இன்று இலங்கை இந்திய ஒப்பந்தத்தை எதிர்க்கும் அமைப்புகளுக்கும் பின் எந்த சக் திகள் இயங்குகின்றன என்பது இதனால் தெளிவாகுகின்றது. இந்த சக்திகளுடன் சோரம் போகும் சில "தீவிர இடதுசாரி வேடதாரிகள்" யாருடைய நலன்களுக்காக இயங்குகின்றார்கள் என்பதை மக்கள் இனம் காண வேண்டும்.

வா. மகாதேவா.

---

SINTHANAI

Estd: 1985. 1/88

All comunications shall be
addressed to :
Editors,
SINTHANAI
Olga str 49,
7-Stuttgart 1.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கூட்டணித் தலைவர்கள் நாடு திரும்ப திட்டம்

## விடுதலைப் புலிகள் இயக்கம் வன்முறையைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்ப அரசியல் குழு கோரிக்கை!

சென்னையில் இந்த அரசியல் குழு நேற்று முன்தினம் அதன் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் கூடியுள்ளது.

கிழக்கு மாகாண முஸ்லிம் தலைவர் அல்ஹாஜ் அஹமத் லெவ்வை, வட பகுதி கம்யூனிஸ்ட் கட்சி முக்கியஸ்தர் திரு. விஜயானந்தன் ஆகியோர் கொல்லப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக அரசியல் குழு வன்மையாகக் கண்டித்துள்ளது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் நல்வாழ்வை முன்னிட்டு ஆயுத நடவடிக்கைகளைக் கைவிட்டு, ஜனநாயக வழிக்குத் திரும்ப வேண்டுமென்ற அரசியல் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

வீரகேசரி (11—3—1988)

---

**சிந்தனை** யில் வெளியாகும் கையெழுத்துடன் கூடிய ஆக்கங்களின் கருத்துக்கள் அவற்றை ஆக்கியோரின் சுதந்திரமான கருத்துக்களே.

ஆசிரியர் குழு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உண்மைகள் உறங்குவதில்லை



புக்காரின்

1988 பெப்ரவரி 4ம் திகதி சோவியத் ருசியாவின் உயர் நீதி மன்றம் வெளியிட்டிருக்கும் தீர்ப்பானது உலகத் தொழிலாளர் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைகின்றது.

1936 — 1938 களில் நடைபெற்ற "மொஸ்கோ வழக்குகளில்" மூன்றாவது பகுதி வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களில் இரகசியப் பொலிசைச்சேர்ந்த ஒருவரைத் தவிர மற்றைய எல்லோரும் குற்றவாளிகளல்ல என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது, கமுயூனிசத்தின் அரிச்சுவடி ( ஏபிசி அவ் கமுயூனிசம் ) என்ற நூலின் இணை ஆசிரியரான புக்காரினும் இவ்வாறு நிரபராதி என நிரூபிக்கப் பட்டவர்களில் ஒருவராவார்.

1936 — 1938 காலப்பகுதிகளில் மொஸ்கோவில் "எதிர்ப்புரட்சியாளர்கள்" எனக் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கெதிராக பிரசித்தி பெற்ற "மொஸ்கோ வழக்குகள்" நடைபெற்றன. ருசியப்புரட்சியில் நேரடியாகப் பங்குகொண்ட பொல்சிவிக்கட்சியின் மத்திய கமிட்டி அங்கத்தவர்கள் உட்பட ஒரு மில்லியன் கமுயூனிஸ்ட்டுக்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மரணதண்டனை வழங்கப்பட்டது. பலர் நாடுகடத்தப் பட்டனர். சிலர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.
இந்த வழக்குகள் "சோடிக்கப்பட்ட வழக்குகள்" எனவும் குற்றவாளிகளிடம் இருந்து பெற்ற வாக்கு மூலங்கள் சித்திரவதைகள் மூலமே பெறப்பட்டவை என வரலாறு அறிந்தவர்கள் வலியுறுத்தி வந்துள்ளனர்.

உலகத்தில் முதன்முதலாக தொழிலாள வர்க்கத்தின் அரசை ஸ்தாபித்த சோவியத்திருநாட்டின் வாரலாற்றில் உள்ள இந்தக்கறை நீக்கப்பட வேண்டும். ஏகாதிபத்தியத்தின் தாக்குதல்களின் போது சோவியத் நாடு நிபந்தனையின்றிப் பாதுகாக்கப்பட வேண்டும், சோசலிச ஜனநாயகம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு இடையூறாக உள்ள "அதிகாரிகளின்" ஆட்சிக்கு எதிரான அரசியல் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென புரட்சிகர மார்க்சிய சக்திகள் தொடர்ச்சியாக கோசமெழுப்பி வந்துள்ளன. இதன் பலன் 1956களில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது காங்கிரசில் பொதுச்செயலாளர் குருச்சேவ் வெளியிட்ட அறிக்கையாகும். இந்த மாநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றில் மறைக்கப்பட்டு வந்த லெனின் இறுதிசாசனம் வெளியிடப்பட்டது. "மொஸ்கோ வழக்குகள்" மீளாய்வு செய்யப்படும் எனவும் உறுதியளிக்கப் பட்டது.

இதன் வளர்ச்சியே இன்று சோவியத் ருசியாவில் தொழிலாளவர்க்க ஜனநாயகம் ஸ்திரப்படுத்தப்படுவதற்காக நடவடிக்கைகள் எடுத்து வரும் கொர்ப்பெச்சோவின் காலத்தில் நிறைவேற்றப் பட்டுவருகின்றன. இந்த உண்மைகள், சோவியத்நாட்டின் சரித்திரத்தையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சோசலிச ஜனநாயகத்தின் தன்மையினையும் திரித்துக் கூறிவந்த கிளிப் பிள்ளைகளுக்கு சங்கடங்களை ஏற்படுத்தலாம். ஆனால் தொழிலாள வர்க்கத்தின் வரலாற்று உண்மைகளை திரிக்கவோ அல்லது திருடவோ எந்த சக்தியாலும் முடியாது என்பதனை இது நிரூபிக்கின்றது.
இது சோவியத் மக்களுக்கும் சர்வ தேச பாட்டாளி சக்திகளுக்கும் கிடைத்திருக்கும் பெரும் அரசியல் வெற்றியாகும்.
இன்னும் பல வரலாற்று உண்மைகள் நிரூபிக்கப்படும் காலம் வெகு தூரத்தில் இல்லை.
உண்மைகள் என்றும் உறங்குவதில்லை.

---

( 3ஆ-ம் பக்கத் தொடர்ச்சி )

1980 ஆம் ஆண்டு இவர் சார்ந்திருந்த மக்கள் விடுதலை முன்னணி யின் இனவாதப்போக்குக் காரணமாக அங்கமைப்பிலிருந்து விலகினார். ஒடுக்கப்பட்டவர்களின் விடிவின்பால் உண்மையான நம்பிக்கை கொண்டிருந்த மாரசிங்காவினை இனவாதமும் சந்தர்ப்பவாதமும் "புரட்சிகரம்" போர்வையில் திணிக்கப்பட்டபோதும் கூட ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஒரு சமாதான இயக்கத்தின் முக்கிய உறுப்பினராக இருந்து இனப்பிரச்சனைக்கு உரிய அரசியல் தீர்வு அவசியம் என்று வலியுறுத்தி வந்தார். இலங்கையின் இடதுசாரி அரசியலுக்கு நன்கு பரிச்சியமான தோழர் மாரசிங்க 29.11.87 அன்று அநுராதபுரத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார். இறுதிவரை தனது கொள்கைகளை விட்டுக்கொடுக்காமல் இனவா வாதச்சேற்றில் விழுந்து விடாமல் உயர்ந்த இலட்சியங்களுடன் காத்திருந்த தோழர் மாரசிங்க இன்று இல்லை. எந்த இனவாதத் -தை வெறுத்து, எந்த விடுதலையை அவர் நேசித்தாரோ அந்த இனவாதத்தை உடைத்துக்கொண்டு எழும் உழைக்கும் மக்களின் மனங்களில் தோழர் மாரசிங்காவின் நினைவுகள் வாழும்.

— காளிதாஸ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நந்தன மாரசிங்க கொல்லப் பட்டார்.....

எழுபதுகளின் ஆரம்பத்தில் எழுச்சி பெற்று எழுந்த மக்கள் விடுதலை முன்னணியின் போராட்டங்களில் பங்கு கொண்டு தனது இளமைப் பருவத்தையும், மாணவப் பருவத்தையும் அவ்வமைப்பின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்து உழைத்த துடிப்பு மிகு போராளி நந்தன மாரசிங்க....... இவரது அயராத உழைப்பும் ஓயாத சிந்தனையும் பழகத்தூண்டும் சுபாவமும் பெரும் தொகையான இளம் புரட்சியாளர்களை இவரது பாசறையில் சேர்த்துக்கொண்டது மட்டுமல்லாமல் பரந்துபட்ட அரசியலரங்கிலிருந்து நண்பர்களையும் இவருக்குச் சேர்த்துக் கொடுத்தது. இளமைக்காலத்தில் வறுமையையும், அரசபடையினரால் கைது செய்யப்பட்டு சிறையிலும் நான்காம் மாடியிலும் சித்திரவதைகளையும் அனுபவித்த பின்னரும் இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்தவர். காட்டுமிராண்டித்தனமான முதலாளித்துவ சமுதாய அமைப்பை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்காக எப்போதும் சாகத்தயாராக இருந்தவர்.



( 39 -ம் பக்கம் பார்க்க )

www.tamilarangam.net

# துப்பாக்கி மட்டுமே வைத்திருப்பவர்கள்

(முரண்பாடுகள் காரணமாக
கொல்லப்பட்டு இறந்து போன
நண்பர்களுக்கு...!)

அது
ஒரு பின்னிரவு
நேரமாக இருக்கலாம்.

மௌனம் உறைந்து போன
அந்த இரவு வேளையில்
என்ன கெட்ட கனவோ
தூக்கம் விழித்து
ஒரு பறவை கீச்சிட்டது.

அன்றும்
ஒரு சோகமான
இரவு நேரம் தான்.

நண்பர்களே
நாங்கள்
தெரிந்து கொண்டோம்.
அழகாய் வெண்பறவைகள்
வானத்தில் வட்டமிட்டு
சிறகசைத்துப் பறக்கையில்
திடீரென
பூமியில் விழுந்து மோதி
சிதறுவது போல
நிகழ்ந்து போய் விட்ட
உங்கள் முடிவுகளை
நாங்கள் தெரிந்து கொண்டோம்.

மரணத்தின் நிழல்கள்
உங்களை தொடர்ந்த போது
உங்கள் முடிவுகளை
நீங்கள்
நிச்சயித்துக் கொண்ட போது
அந்தக் கணத்தில்
எங்களுக்காக

உங்கள் தேசத்து மக்களுக்காக
என்ன சொல்வதற்கு
உங்கள் உதடுகள்
முயன்றன?

எங்களைப் போலவே
உங்களுக்கும் உள்ள
ஒரு அன்பான அம்மா

உங்கள் வரவுகளுக்காக
ஏங்கியபடி
கடிதங்களை பெயர் தெரியாதவர்களிடம்
கொடுத்து விட்டு
பதிலை எதிர்பார்த்து
இளம் வயதில் ஒரு தங்கை
இன்னமும்
கடமைகள் முடித்து வரும் வரை
உங்களுக்காகவே காத்திருக்கும்
பிரியமானவள்.

இவர்களுக் கெல்லாம்
என்ன சேதியை
விட்டுச் சென்றீர்கள்.

குறித்துக் கொள்கிறோம்
நண்பர்களே!
சுதந்திரத்திற்காய் போராடி
சுதந்திரம் மறுக்கப்பட்ட
மனிதர்களின் வரலாற்றை.

புறப்பட்டீர்கள்,
வேகமாக

எப்படியோ தேடிக் கொண்டீர்கள்
துப்பாக்கிகள்
வெடிகுண்டுகள்
தாக்குதல்கள்...
ஒன்றையுமே மறந்து போய்விடவில்லை.

அவசரத்தில்
ஒன்றைமட்டும்

மக்களை
மறந்து விட்டீர்கள்

இதையும்
மறக்காமல் நாங்கள்
குறித்துக் கொள்கிறோம்.

நண்பர்களே!
உங்கள் மரணங்களில்
நாங்கள் கற்கிறோம்.

நண்பர்களே!
இன்னமும்
எங்கள் தேசத்தில்
வீசுகின்ற காற்று
மலர்கின்ற மலர்கள்
துளிர்க்கின்ற மரங்கள்
வாழ்கின்ற வரையில்...

உங்கள் புதைகுழிகளில
அவை
வீசிக் கொண்டு
மலர்ந்து கொண்டு
துளிர்த்துக் கொண்டுதான் இருக்கும்.

– நன்றி மரணம் –

–செழியன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரிந்து கொண்டிருக்கும் நேரம்

சேரன்

இன்று வாய்திறவாதே
மௌனம் கொள்:

இன்று மட்டும்
நம் வாயிலிருந்து வருகிற
ஒவ்வொரு உண்மைக்கும்
ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டு
பரிசாகக் கிடைக்கிற
காலம் ஒன்று வருமோ?

அல்ல எனில் ஏனிந்த அவலம்?
முச்சந்தி மாமரத்தின் கீழ்
எரிந்தன உடல்கள்;
எழுந்த சுவாலைகளில்
கருகின குருத்துக்கள்.

புகை;
அச்சம்; கொடுமை
துயரம்; பீதி;
அனைத்துமே கறுப்பு.

அசுர நிறம்
துர்க்குறிகள் விரவி
இருளின் நிழல்கள் கவிய
உடல்களும் மனமும்
எரிந்து கொண்டிருக்கும்
இந்நேரம் —
குரல் ஒடுங்கிப்
பாடல் இழந்தன குயில்கள்.
மிரட்சி தெறித்த
விழிகள் நகர்த்தி
அலற மறந்தனர் சிறுவர்

சாம்பலைக்
காற்றுக் கொண்டு போயிற்று.

எலும்புகளை
நாய் கொண்டு போயிற்று

மனிதத்தை
துப்பாக்கி முனையில்
நடத்திச் சென்று
புதைகுழி விளிம்பில்
வைத்துச் சுட்டுப்
புறங்காலால்
மண்ணைத் தள்ளி
மூடிவிட்டு வந்து,
தெருவோரச் சுவரில்
குருதியறைந்து
நியாயம் சொல்கிறார்கள்.
நியாயம்!

யார் கேட்டார் உம்மிடத்தில்
நியாயத்தை?

எச்சிறு புல்லும்
எச்சிறு தளிரும்
எச்சிறு புள்ளும்
நம்பிக்கைகளின்
உயிர்மூச்சுடனேயே
மலரும்;
வளரும்; முதிரும்;
மடியும்
என நான் அறிவேன்.

எனினும்
சாபங்கள் சூழ்ந்த
தாய்நாடு எமதெனத்
துயரில் புலம்பும்
முதியோர் சிலருக்கு
இக்கணம்,
உடல்களும் மனமும்
எரிந்து கொண்டிருக்கும்
இக்கணம்
நம்பிக்கையை
எப்படி உரைப்பேன்?

புதை குழிகளுக்கிடையில்
பிணங்களுக்கிடையில்
குருதி படிந்த
உடைகளுக்கிடையில்
புத்திர சோகத்தில்
நெஞ்சு பிளந்த
அன்னையர் கண்ணீர்த்
துளிகளுக்கிடையில்
'துர்ப்பாக்கியம்
தற்காலிகமானது
என்று குரலெழுப்ப
மெலிந்த உடலும்
வளர்ந்த தாடியும்
உடைந்த மனமும்
குழம்பிய தலையுமாய்
வார்த்தைகளுக்கு அலைகிறேன்
நான்.

□

நன்றி! நட்புறவு பாலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்களுடன் சில வார்த்தைகள்...........

சிந்தனை இதழ்களை ஒழுங்காக வெளிக் கொண்டு வருவதற்கு இடையூறாக இருப்பது சாதாரணமாக இத்தகைய பத்திரிகைகளுக்கு ஏற்படும் நிதிநெருக்கடியே -யாகும். தாங்கள் பெறும் இதழுக்குரிய *பணத்தைச் செலுத்துவதன் மூலமும், ஆறு இதழ்களுக்கான வருட சந்தா 20 டி.எம். எமக்கு அனுப்புவதன் மூலமும் நீங்கள் இந்த நிதி நெருக்கடியைப் போக்கி சிந்தனை யை ஒழுங்காக வெளிவர உதவி செய்யலாம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள தோழர்களுக்கு எமது பத்திரிகைகளை இலவசமாகவே அனுப்புகின்றோம். எமது பத்திரிகையைப் பெற விரும்பும் மற்றைய தோழர்களின் முகவரிகளை எமக்கு அறிவிப்பதன் மூலமும், தங்களிடமுள்ள பத்திரிகைகளையும், பத்திரிகை நறுக்குகளையும் எமக்கு அனுப்புவதன்மூலமும் நீங்கள் எமக்கு உதவலாம்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள தோழர்கள் நிதி மற்றும் வருடசந்தா( 20 டி.எம்) அனுப்ப வேண்டிய

முகவரி--

P.Kumarasamy,
c/o. SINTHANAI,
Olga str 49,
7- Stuttgart 1.

* குறிப்பு: தனிப் பிரதிக்கான அன்பளிப்பு 4 டி.எம் ஐ தபால் முத்திரைகள் மூலமாகவும் அனுப்பலாம்.

ஆசிரியர் குழு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

